முட்டுக்காட்டில் சர்வதேச ஆட்டிசம் விழிப்புணர்வு தினம்

ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்று குழந்தைகளுடன் உரையாடினார்

■ முட்டுக்காடு

முட்டுக்காட்டில் நடைபெற்ற சர்வதேச ஆட்டிசம் விழிப்புணர்வு தின விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்று குழந்தைகளுடன் உரையாடினார்.

சென்னை அருகே முட்டுக்காட்டில் செயல்பட்டு வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனத்தில் ஆட்டிசம் குறைபாடு விழிப்புணர்வு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி அந்த நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு இயக்குநர் நச்சிகேதா ரவுட் தலைமை தாங்கினார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆட்டிசம் பாதித்த குழந்தைகள் கல்வி கற்கும் முறை குறித்து கேட்டறிந்தார். இதைத் தொடர்ந்து ஆட்டிசம் பாதித்த குழந்தைகள் வரைந்த ஓவியங்கள், கணினி வரைகலை ஆகியவற்றை பார்வையிட்டு பாராட்டினார்.

● சென்னை அருகே முட்டுக்காட்டில் செயல்பட்டு வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனத்தில் ஆட்டிசம் குறைபாடு விழிப்புணர்வு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதில் ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்று குழந்தைகளுடன் உரையாடினார்.

மகத்தான ஆற்றல் பெற்றவர்கள்

இதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியதாவது: ஆட்டிசம் பாதிப்பு உள்ள குழந்தைகள் மகத்தான ஆற்றலை பெற்றுள்ளனர். அவர்களின் திறமைகளை வெளிக்கொணர நரம்பியல் சார்ந்த நிபுணர்களுடன் நமது சமூக அமைப்பு, சமமான வாய்ப்பு, கண்ணியம், சமூக சூழல் ஆகியவை தேவைப்படுகின்றன. நமது நாட்டின் முன்னேற்றத்துக்கும், மனித குலத்தின் முன்னேற்றத்துக்கும் இக்குழந்தைகளின் தனித்துவமான திறமைகள் இன்றியமையாததாக உள்ளன. அவர்களின் சிறப்பு தேவைகளை பூர்த்தி செய்ய திறமையான பயிற்சியாளர்கள் மற்றும் இதை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை உடைய தொழில் முனைவோர் தேவை.

மேலும், ஆட்டிசம் உள்ள குழந்தைகள் தங்களின் முழுத்திறனையும் உணரக்கூடிய ஒரு சூழலை உருவாக்க சமூகம் கவனம் செலுத்த வேண்டும். அந்த அணுகுமுறையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆட்டிசம் பாதித்த குழந்தைகளின் பெற்றோருக்கு இரக்கம், தகவமைப்பு, ஏற்றுக் கொள்ளும் மனவலிமை, ஆதரவு போன்றவற்றை நாம் கூட்டாக வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் நெல்லை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக பேராசிரியர் சுதாகர், வழக்கறிஞர் அபிநயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிறைவில் நிறுவனத்தின் சிறப்புக் கல்வித்துறை தலைவர் காமராஜ் நன்றி கூறினார்.

பிரியாணி, சவர்மா சாப்பிட்ட 20 பேர் பாதிப்பு

திருவல்லிக்கேணியில் பிரபல ஓட்டலுக்கு பூட்டு

உணவு பாதுகாப்பு துறை நடவடிக்கை

■ சென்னை

திருவல்லிக்கேணியில் உள்ள பிரபல ஓட்டலில் பிரியாணி, சவர்மா சாப்பிட்ட 20-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகின்றனர். அதைத் தொடர்ந்து அந்த ஓட்டலுக்கு உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பூட்டு போட்டு சீல் வைத்தனர்.

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் இயங்கிவரும் ஓட்டல் பிலால் பிரியாணி கடையில் கடந்த 30-ம் தேதி பிரியாணி, சவர்மா உள்ளிட்ட உணவுகளை உட்கொண்ட 20 பேருக்கு வாந்தி, மயக்கம், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட உபாதைகள் ஏற்பட்டன. அதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் திருவல்லிக்கேணியில் உள்ள தனியார் மருத்துவமனை, தண்டையார்பேட்டை தொற்றுநோய்தடுப்பு மருத்துவமனை, ராயப்பேட்டை அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகின்றனர். இதுகுறித்து திருவல்லிக்கேணி போலீஸில் புகார் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து உணவு பாதுகாப்புத் துறைக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

புகாரின் அடிப்படையில் சோதனை மேற்கொள்வதற்காக சென்னை மாவட்ட உணவுபாதுகாப்புத்துறைநியமன அதிகாரி சதீஷ்குமார் தலைமையிலான குழுவினர் நேற்று மதியம் அங்கு சென்றனர். ஆனால் அதிகாரிகள் வருகை குறித்து முன்கூட்டியே அறிந்த ஓட்டலின் உரிமையாளர்கள்ஓட்டல்நுழைவுவாயில்களை பூட்டிவிட்டு சென்றுவிட்டனர். உரிமையாளர்களை செல்போன் மூலம் தொடர்பு கொள்ள அதிகாரிகள்முயன்றபோது செல்போன் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது. எனவே, உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள், காவல் அதிகாரிகளுடன் இணைந்து ஓட்டலை பூட்டி சீல் வைத்தனர்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் சதீஷ்குமார் கூறுகையில், "முறையான சோதனை நடத்தப்படும் வரை மக்கள் ஓட்டலில் சாப்பிட்டு பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, தற்காலிகமாக பூட்டியுள்ளோம். உரிமையாளர்களை தொடர்புகொள்ள தொடர்ந்து முயன்று வருகிறோம். ஓட்டலில் போடப்பட்டுள்ள பூட்டை எங்களின் அனுமதியின்றி உடைத்தால் கிரிமினல் குற்றம். உரிய விளக்கம் தரும்வரை இக்கடையை திறக்க விடமாட்டோம்" என்று தெரிவித்தார்.

பிரபலமான ஓட்டலில் சாப்பிட்டு 20-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈமக் காரியங்களுக்கு ரூ.20 ஆயிரம் நிதி உதவி கோயில் பணியாளர்கள் கோரிக்கை

■ சென்னை

ஈமக்காரியங்களுக்கு ரூ.20 ஆயிரம் உயர்த்தி வழங்க வேண்டும் என கோயில் பணியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் ஆலோசனை கூட்டம் வில்லிவாக்கம் சுவுமிய தாமோதர பெருமாள் கோயில் வளாகத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் சென்னை கோட்ட தலைவர் தனசேகர், செயலாளர் ரமேஷ், மகளிர் அணி துணைச் செயலாளர் அமிர்தவல்லி உள்பட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், கோயில்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் தினக்கூலி தொகுப்பூதிய பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். ஈமக்காரியங்களுக்கு ரூ.20 ஆயிரம் உயர்த்தி வழங்க வேண்டும். செயல் அலுவலர்களுக்கான நிலை 4 பணியிடங்களை அரசு தேர்வாணையம் மூலம் தேர்வில் 25 சதவீத உள் ஒதுக்கீடு வழங்க அரசாணை விரைவில் பிறப்பிக்க வேண்டும்.

பணியாளர் குடியிருப்பு கட்டித் தர வேண்டும். கோயில் பணியாளர்களை முழுநேர அரசு ஊழியர்களாக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிராகரிக்கப்பட்ட உயர் பென்ஷன் தொடர்பான விண்ணப்பங்களை

ராயப்பேட்டை வருங்கால வைப்புநிதி நிறுவனம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்

கோ-ஆப்டெக்ஸ் ஊழியர் சங்கம் கோரிக்கை

■ சென்னை

நிராகரிக்கப்பட்ட உயர் பென்ஷன் தொடர்பான 279 விண்ணப்பங்களை ராயப்பேட்டை வருங்கால வைப்பு நிதி நிறுவனம் மறுபரிசீலனை செய்து, உயர் பென்ஷன் தொகை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து, கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் சங்க பொதுச்செயலாளர் டி.விஸ்வநாதன் கூறியுள்ளதாவது:

உச்ச நீதிமன்றம் 2022-ம் ஆண்டு நவ.4-ம் தேதியிட்ட உத்தரவின்படி, இபிஎஸ்- 95 திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர்கள் உயர் பென்ஷன் பெறுவதற்கு தகுதி உடையவர்கள் ஆவார்கள். அதன் அடிப்படையில், 2014-ம் ஆண்டு செப்.1-ம் தேதி-க்கு பிறகு, பணியில் இருக்கும் ஊழியர்களும், ஊழியர்கள் பணிபுரியும்நிறுவனமும் இணைந்து கூட்டு விருப்பம் (ஜாய்ன்ட் ஆப்சன்) வழங்கியுள்ளார்கள்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் 2014-ம் ஆண்டு செப்.1-ம் தேதிக்கு பிறகு, பணி ஓய்வு பெற்ற ஊழியர்களிடம் விண்ணப்பங்களை பெற்று அதனை முறைப்படி, சென்னை ராயப்பேட்டை வருங்கால வைப்பு நிதி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

279 விண்ணப்பங்களையும் ராயப்பேட்டை வருங்கால வைப்பு நிதி நிறுவனம் நிராகரிப்பு செய்ததாக கோ-ஆப்டெக்ஸ் நிர்வாகத்துக்கு மின்னஞ்சல் மூலமாக தகவல் தெரிவித்துள்ளது.

இந்த 279 விண்ணப்பங்களையும் ராயப்பேட்டை வருங்கால வைப்பு நிதி நிறுவனம் நிராகரிப்பு செய்ததாக கோ-ஆப்டெக்ஸ் நிர்வாகத்துக்கு மின்னஞ்சல் மூலமாக தகவல் தெரிவித்துள்ளது. ராயப்பேட்டை வருங்கால வைப்பு நிதி நிறுவனம் நிர்வாகத்துக்கோ, உறுப்பினர்களுக்கோ எந்தவித முன்னறிவிப்பும் செய்யாமல் உயர் பென்ஷன் தொகை விண்ணப்பங்களை நிராகரிப்பு செய்தது உச்ச நீதிமன்றம் தீர்ப்புக்கு எதிரானதாகும்.

உச்சநீதிமன்றம் உயர் பென்ஷன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க காலக்கெடு எதுவும் நிர்ணயம் செய்யாத நிலையில், ராயப்பேட்டை வருங்கால வைப்புநிதி நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் உயர் பென்ஷன் விண்ணப்பங்களை நிராகரிப்பு செய்யப்பட்டதால், பணி ஓய்வு பெற்ற ஊழியர்களும், பணியில் இருக்கும் ஊழியர்களும் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

நிராகரிக்கப்பட்ட உயர் பென்ஷன் தொடர்பான 279 விண்ணப்பங்களை ராயப்பேட்டை வருங்கால வைப்புநிதி நிறுவனம் மறுபரிசீலனை செய்து ஊழியர்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவின்படி, உயர் பென்ஷன் தொகை கிடைப்பதற்கு வழிவகை வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக பிரதமர், மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் ஆகியோருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதவி நீக்கத்தை எதிர்த்து

தாம்பரம் மாநகராட்சி மண்டல தலைவர் வழக்கு

தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

■ சென்னை

விதிகளை மீறி அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் கூறி தாம்பரம் மாநகராட்சி 40-வது வார்டு கவுன்சிலரும், செம்பாக்கம் 3-வது மண்டலக்குழுத் தலைவருமான ஜெயபிரதீப்பை பதவி நீக்கம் செய்து நகராட்சி நிர்வாகத்துறை செயலர் கடந்த மார்ச் மாதம் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து ஜெயபிரதீப், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அதில், "தாம்பரம் மாநகராட்சி 3-வது மண்டலக் குழு தலைவராக இருந்த என்னை, சக கவுன்சிலர்களைக் கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக செயல்பட்டதாகவும், மண்டலக்குழுக் கூட்டத்தை முறையாக கூட்டவில்லை என்றும், அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கூறி பதவி நீக்கம் செய்துள்ளனர். இது சட்ட விரோதமானது. எனது விளக்கத்தைக் கேட்காமல் என்னை பதவி நீக்கம் செய்தது செல்லாது என அறிவித்து அதை ரத்து செய்ய வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜெ.சத்யநாராயண பிரசாத், இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதில் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஏப்.21-க்கு தள்ளிவைத்துள்ளார்.

NEOGROWTH
Lending simplified. Growth amplified.

M/S நியோகுரோத் கிரெடிட் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம் : டைம்ஸ் ஸ்கூயர், டவர் E, 9வது தளம், அந்தேரி கூர்லா சாலை, மரோல், அந்தேரி கிழக்கு - 400059.

கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள் M/s. நியோகுரோத் கிரெடிட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து நிதி உதவியைப் பெற்றிருந்தாலும், கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் உரிய தேதிகளின்படி வட்டி மற்றும் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் பல்வேறு தவறுகளைச் செய்துள்ளனர் என்பதை நாங்கள் தெரிவிக்கிறோம். இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இந்தக் கணக்கு செயல்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது, நிதிச் சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI சட்டம்) மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002-ன் பிரிவு 13(12) உடன் படிக்கப்பட்ட விதி 3-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் கோரிக்கை அறிவிப்புகளை வெளியிடப்பட்டது, பின்வரும் கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், கட்டணங்கள் மற்றும் பணம் செலுத்தும் தேதிவரை உள்ள செலவினங்கள் சேர்த்து அறிவிப்பு அனுப்பப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் தொகை செலுத்தப்பட வேண்டும்.

அவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளில் அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவிப்புகள் வழங்கப்படாமல் திரும்பி வந்துள்ளன, எனவே இது குறித்து பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

கடன்தாரர் பெயர்/முகவரி மற்றும் டிரஸ்ட் பெயர்	**1. கிரிஸ்டல் கிராப்பிக்ஸ் (மெர்சன்ட்) (ஒரு உரிமையாளர் நிறுவனம் அதன் உரிமையாளர்கள்/அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர் மூலம்)** எண்.6/4, 2வது தளம், ரிஷபா கேஸ்டல், வள்ளளார் நகர், திருமுல்லைவாயல், திருவள்ளூர் - 600062 தமிழ்நாடு, மேலும் : 1வது தளம், எண். 762, பூந்தமல்லி நெடுஞ்சாலை, NSK சிக்னல் அருகில், அரும்பாக்கம், சென்னை, சென்னை-600106 தமிழ்நாடு, **மேலும்:** பிளாட் எண். S1, எண். 2வது தளம், ரிஷபா கேஸ்டல், மனை எண்.6, வள்ளளார் நகர், 2வது தெரு, திருமுல்லைவாயல், திருவள்ளூர், மாசிம்மனீஸ்வரர் கோவில், சென்னை - 600062 தமிழ்நாடு. **2. கந்ததும்புரக்கல் சசி பிரவீன் (கடன்தாரர்/உரிமையாளர்/அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்)** C/O: சசி, எண்.6/4, வள்ளளார் நகர் 2வது தெரு, திருமுல்லைவாயல், திருவள்ளூர் - 600062 தமிழ்நாடு. மேலும்: S1, இரண்டாவது தளம், ரிஷபா கேஸ்டல், மனை எண்.6, வள்ளளார் நகர், 2வது தெரு, திருமுல்லைவாயல், திருவள்ளூர், மாசிம்மனீஸ்வரர் கோவில், சென்னை-600062, தமிழ்நாடு. **3. இந்திராபாய் சசி (இணை-மனுதாரர்/இணை-கடன்தாரர்/உரிமையாளர்/அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்)** எண்.6/4, வள்ளளார் நகர் 2வது தெரு, திருமுல்லைவாயல், திருவள்ளூர் - 600062 தமிழ்நாடு. **மேலும்:** S1, இரண்டாவது தளம், ரிஷபா கேஸ்டல், மனை எண்.6, வள்ளளார் நகர், 2வது தெரு, திருமுல்லைவாயல், திருவள்ளூர், மாசிம்மனீஸ்வரர் கோவில், சென்னை-600062, தமிழ்நாடு.
அறிவிப்பு நாள் & NPA	**அறிவிப்பு நாள் :** 19.03.2025 மற்றும் **NPA நாள் :** 24.02.2025.
அறிவிப்பு தொகை	**ரூ.41,70,086.11** (ரூபாய் நாற்பத்தி ஒரு இலட்சத்து எழுபதாயிரத்து எண்பத்தி ஆறு மற்றும் பைசா பதினொன்று மட்டும்)

பாதுகாப்பு சொத்துக்கள் விவரம் : கடன் கணக்கு/அக்ரிமெண்ட் எண். 1253588, 1294976 மற்றும் 1303085

அட்டவணை - 2 மனை எண்.6-ன் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அனைத்து பகுதிகளும், ச.எண்கள். 292/7, 292/8 மற்றும் 292/9 அளவுகள் 565 சதுர அடி பரப்பு, 2587 சதுர அடியில் UDS, அத்துடன் பிளாட் எண். S1, இரண்டாவது தளம், சூப்பர் பில்டப் ஏரியா 1044 சதுர அடி அத்துடன் பொது ஏரியா மற்றும் ஒரு மூடப்பட்ட கார் நிறுத்துமிடம், அப்பார்ட்மெண்ட் பெயர் "ரிஷபா கேஸ்டல்",-ல் அமைந்துள்ளது, இரண்டாவது தெரு, வள்ளளார் நகர், திருமுல்லைவாயல் கிராமம், ஆவடி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை - 600062-க்குட்பட்டது மற்றும் எல்லைகள் : கிழக்கு : மனை எண்.7, மேற்கு : மனை எண்.5, வடக்கு : 24 அடி சாலை, தெற்கு : காலி நிலம் மற்றும் அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் : 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் : 60 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 46 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 39 அடி 9 அங்குலம், அம்பத்தூர் சார்-பதிவு மாவட்டம் மற்றும் வடசென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

மேற்கூறிய சூழ்நிலைகளில், மேற்கண்ட கடன்தாரர்களுக்கும், இணை-கடன்தாரர்களுக்கும், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் எதிர்கால வட்டி மற்றும் பொருந்தக்கூடிய கட்டணங்களுடன் மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையை செலுத்துமாறு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, தவறினால் இந்த அறிவிப்பின் 60 நாட்கள் காலாவதியான பிறகு, SARFAESI சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதன்கீழ் உள்ள பொருந்தக்கூடிய விதிகளின்கீழ், கடன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களின் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை கையகப்படுத்துவது உட்பட, பாதுகாக்கப்பட்ட சொத்துக்களுக்கு எதிராக மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். SARFAESI சட்டத்தின் பிரிவு 13(13)-ன்கீழ், எந்தவொரு கடன்தாரரும் கடன் அளித்தவரின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தனது பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு வழியில் மாற்றக்கூடாது என்பதை நினைவில் கொள்க.

நாள் : 03.04.2025
இடம் : சென்னை, தமிழ்நாடு

Sd/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
நியோகுரோத் கிரெடிட் பிரைவேட் லிமிடெட்

பரந்தூர் விமான நிலையத்துக்கு நிலம் கையகப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து வழக்கு

தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

■ சென்னை

பரந்தூர் விமான நிலையத்துக்கு நிலம் கையகப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவுக்கு உட்பட்ட பரந்தூரில் ரூ.34 ஆயிரம் கோடி செலவில் பசுமை வெளி விமான நிலையத்தை வரும் 2030-ம் ஆண்டுக்குள் அமைக்க மத்திய, மாநில அரசுகள் திட்டமிட்டுள்ளன.

இதற்காக பரந்தூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளான வளத்தூர், நெல்வாய், தண்டலம், மேல்படவூர், நாகப்பட்டு, ஏகனாபுரம், எடையார் பாக்கம், அக்கம்மாபுரம், குணகரம் பாக்கம், சிங்கிலி பாடி, மகாதேவி மங்கலம் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் அரசு வசம் உள்ள 1,972 ஏக்கர் புறம்போக்கு நிலமும், தனிநபர்கள் வசம் உள்ள 3,774 ஏக்கர் நிலத்தையும் கையகப்படுத்த அரசு முடிவு செய்து அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக மகாதேவி மங்கலத்தில் உள்ள 217 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த மாவட்ட சிறப்பு வருவாய் அதிகாரி கடந்த 2024 மார்ச் மாதம் நோட்டீஸ் பிறப்பித்தார்.

நில உடமையாளர்கள் ஆட்சேபம்

இந்த நோட்டீஸை ரத்து செய்து, நிலத்தை கையகப்படுத்த தடை விதிக்கக்கோரி மகாதேவி மங்கலத்தைச் சேர்ந்த சிவலிங்கம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், பரந்தூரில் விமான நிலையம் அமைக்க தனிநபர்களின் நிலங்களை கையகப்படுத்த தெரிவிக்கப்பட்ட ஆட்சேபங்களை அரசு கவனத்தில் கொள்ளவில்லை. இந்த திட்டத்துக்காக என்னுடைய ஒரு ஏக்கர் 69 சென்ட் நிலத்தை கையகப்படுத்தக்கூடாது என அரசுக்கு உத்தரவிட வேண்டும், எனக்கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ், இதுதொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஏப்.7-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

sivakumar.v@indiautar

உயர் நீதிமன்ற வளாகம், அண்ணா நகரில்

பன்னடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கப்படும்

துணை மேயர் மகேஷ்குமார் தகவல்

■ சென்னை சென்னை

மாநகராட்சி சார்பில் உயர் நீதிமன்றம், அண்ணா நகர், பெசன்ட் நகர் போன்ற பகுதிகளில் பன்னடுக்கு வாகன நிறுத்தங்கள் அமைக்கப்படும் என்று துணை மேயர் மு.மகேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை தியாகராயநகர் பாண்டி பஜாரில் உள்ள பன்னடுக்கு தானியங்கி வாகன நிறுத்தத்தில் போதிய வசதிகள் இல்லை, முறையாக பராமரிக்கப்படவில்லை, மக்கள் மத்தியில் போதிய வரவேற்பு இல்லை என தொடர்ந்து புகார்கள் எழுந்தன.

இந்நிலையில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு உத்தரவின் பேரில், மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், அங்கு சென்று ஆய்வு செய்தார். தொடர்ந்து, பாண்டி பஜாரில் உள்ள நடைபாதை வணிக வளாகத்தை பார்வையிட்டு, அதை மேம்படுத்துவது குறித்து அலுவலர்களுடன் கலந்துரையாடி, அறிவுரைகளை வழங்கினார்.

தணிகாசலம் சாலை

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தியாகராயநகர் பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், பாண்டிபஜார் தணிகாசலம் சாலையில் மாநகராட்சி சார்பில் ரூ.40 கோடியில் பன்னடுக்கு வாகனநிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளது. 512 இரு சக்கர வாகனங்கள், 213 கார்களை தானியங்கி முறையில் நிறுத்தும் வகையில் இந்த வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சேவையை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்தில் வழக்கு

இந்த வாகன நிறுத்தத்தை பராமரிக்கும் பணி தனியாரிடம் வழங்கப்பட்டது. அவர்கள் நீதிமன்றம் சென்றுள்ளனர். வழக்கு முடிவும் தருவாயில் உள்ளது. நீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகு இந்த வாகன நிறுத்தம் சிறப்பாக இயக்கப்படும். மேலும், வாகன நிறுத்த சேவைகளை மேம்படுத்த வட்டார அளவில் புதிய ஒப்பந்தங்களை போட இருக்கிறோம். பெசன்ட்நகர், அண்ணாநகர், உயர் நீதிமன்ற வளாகம் போன்ற பகுதிகளில் மாநகராட்சி சார்பில் பன்னடுக்கு வாகன நிறுத்தங்களை அமைக்க திட்டமிட்டிருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மண்டலக் குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மேற்பார்வை பொறியாளர் (பூங்கா) டி.அன்பழகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. **கிளை அலுவலகம் :** எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	01.04.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	34239440000139	1) Ms. பாபு, உரிமையாளர் Zion Sweets and Chips, 2) திரு. பாபு C, 3) திருமதி. ஷார்லின் சைனி	12-10-2023	11-05-2024	**ரூ.13,67,229.25** (ரூபாய் பதிமூன்று இலட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து இருநூற்றி இருபத்தி ஒன்பது மற்றும் பைசா இருபத்தி ஐந்து மட்டும்)	15.04.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	**ரூ.30,38,